<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>

<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>

**சி.சி.எண்: 23/2019**

**அ.சா : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **முருகன்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **பொன்னுசாமி** |
| ஊர் | : | **கூரம்பட்டி** |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | **விவசாயம்** |
| மதம் | : | |
| வயது | : | 46 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 20.02.2024.**

**2,3 எதிரிகள் ஆஜர். 1 வது எதிரி ஆஜர்இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் தற்போது கூரம்பட்டி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரையானவர் தெரியும். ஆஜர் எதிரிகள் தெரியும். எதிரிகளுக்கும் அ.சா.1 முதல் 3 வரையானவர்களும் ஏற்கனவே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 03.10.2018 ம் தேதி மாலை 04.00 மணியளவில் 1ம் எதிரி சகாதேவன் என்பவரின் பூந்தோட்டம் அருகே இருந்த போது எதிரிகள் 3 பேரும் சேர்ந்து கொண்டு அ.சா.1 ராமசாமியை நில தகாராறு சம்மந்தமாக பேசிகொண்டிருந்தார்கள். எதிரிகள் 3 பேரும் சேர்ந்து அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களை அடித்து காயப்படுத்தினார்கள். யார் யாரை அடித்து காயப்படுத்தினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது.**

**இரண்டு தரப்பினருக்கும் அடிப்பட்டது. நாங்கள் சண்டையை விளக்கிவிட்டோம். எதிரிகள் என்ன ஆயுதத்தை பயன்படுத்தி தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது ஆகும். அதை போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில்**

போட்டுக்கொடுத்தேன். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகேட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சண்டையை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரிதான். சண்டை நடந்த போது சகாதேவன் கையறுவாளால் பெருமாளை தாக்கினார் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. ராமசாமி அதை தடுக்க சென்றபோது சகாதேவன் ராமசாமியை வெட்டி காயப்படுத்தினார் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. அ.சா.3 அங்கு வந்தபோது 1,2 எதிரிகள் கையால் அடித்தார்கள் என்றால் சரிதான். சகாதேவன் குப்புசாமியை கையில் அடித்தார் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை.

சம்பவ இடத்திற்கு போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து கையறுவாள், இரும்பு பைப்பு ஆகியவற்றை கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும்போது சம்பவத்தின் போது கையறுவாளை சகாதேவன் வைத்திருந்தாக நான் கூறவில்லை. இரும்பு பைப்பை சம்பவத்தின்போது 2ம் எதிரி போத்திராஜ் பயன்படுத்தியதாக நான் கூறவில்லை. எதிரிகள் கையறுவாளையும், இரும்பு பைப்பையும் பயன்படுத்தியதாகவும், அதை நான் அடையாளம் காண்பித்ததாகவும், போலீசார் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**இல்லை**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஒம்/- எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி.எண்: 23/2019**

**அ.சா : 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **கண்ணியப்பன்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **சின்னகவுண்டர்** |
| ஊர் | : | **கூரம்பட்டி** |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | **விவசாயம்** |
| மதம் | : | |
| வயது | : | 56 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 20.02.2024.**

**2,3 எதிரிகள் ஆஜர். 1 வது எதிரி ஆஜர்இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கூரம்பட்டி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரையானவர் தெரியும். வழக்கின் எதிரிகள் தெரியும். எதிரிகளுக்கும் அ.சா.1 முதல் 3 வரையானவர்களும் ஏற்கனவே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 03.10.2018 ம் தேதி மாலை 04.00 மணியளவில் 1ம் எதிரி சகாதேவன் என்பவரின் பூந்தோட்டம் அருகே இருந்த போது சண்டை நடந்த சத்தம்கேட்டு சென்று பார்த்தேன். அப்போது அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களுக்கு காயம்ஏற்பட்டு இருந்தது. நான் சண்டையை விளக்கிவிட்டேன். யார் யாரை அடித்தார்கள் என்று நான் பார்க்கவில்லை.

என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது ஆகும். அதை போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் போட்டுக்கொடுத்தேன். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகேட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**சண்டையை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. சண்டை நடந்த போது சகாதேவன் கையறுவாளால் பெருமாளை தாக்கினார் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. ராமசாமி அதை தடுக்க சென்றபோது சகாதேவன் ராமசாமியை வெட்டி காயப்படுத்தினார் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. அ.சா.3 அங்கு வந்தபோது 1,2 எதிரிகள் கையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. சகாதேவன் குப்புசாமியை கையில் அடித்தார் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை.**

**சம்பவ இடத்திற்கு போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து கையறுவாள், இரும்பு பைப்பு ஆகியவற்றை கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும்போது சம்பவத்தின் போது கையறுவாளை சகாதேவன் வைத்திருந்தாக நான் கூறவில்லை. இரும்பு பைப்பை சம்பவத்தின்போது 2ம் எதிரி போத்திராஜ் பயன்படுத்தியதாக நான் கூறவில்லை. எதிரிகள் கையறுவாளையும், இரும்பு பைப்பையும் பயன்படுத்தியதாகவும், அதை நான் அடையாளம் காண்பித்ததாகவும், போலீசார் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**இல்லை**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.**

**ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 23/2019**

**அ.சா : 6**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **துரைசாமி** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **ராமசாமி** |
| ஊர் | : | **கூரம்பட்டி** |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | **விவசாயம்** |
| மதம் | : | |
| வயது | : | 80 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 20.02.2024.**

**2,3 எதிரிகள் ஆஜர். 1 வது எதிரி ஆஜர்இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் தற்போது கூரம்பட்டி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரையானவர் உறவினர்கள். வழக்கின் எதிரிகள் எனது உறவினர்கள். அ.சா.1 முதல் அ.சா.3 மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக கேள்விப்பட்டு மருத்துவமணைக்கு சென்று பார்த்தேன். அவர்களுக்கு என்ன நடந்தது என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகேட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**எதிரிகள் ஒன்றுசேர்ந்து அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களை அசிங்கமாக பேசி கையறுவாளாலும், கம்பியாலும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**இல்லை**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.**

**ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.**